Administrative Appeals Tribunal

தகவல் ஏடு

# பாதுகாப்பு விசா மறுப்புகள்

பாதுகாப்பு விசா ஒன்றை வழங்க **மறுத்து** ‘உள்நாட்டு விவகாரத் திணைக்களம்’ (‘திணைக்களம்’) எடுக்கும் முடிவு ஒன்றின் AAT மீள்பரிசீலனையைப் பற்றிய கேள்விகளுக்கு இந்தத் தகவல் ஏடு பதிலளிக்கிறது.

## AAT எதைப் பற்றி முடிவு செய்யவேண்டும்?

‘புலப்பெயர்வு சட்ட’(Migration Law)த்தின் கீழ் நீங்கள் ஒரு ‘அகதி’யா என்பதில் AAT திருப்தியடைகிறதா என்று அது முடிவு செய்யவேண்டும்.

நீங்கள் ஒரு அகதி என்று AAT திருப்திப்படாவிட்டால், ‘குறை-நிரப்புப் பாதுகாப்பு’ (‘complementary protection’)-இன் கீழ் உங்களுக்கு விசா கொடுக்கப்படலாமா என்று AAT முடிவு செய்யும். இல்லை என்றால், குறை-நிரப்புப் பாதுகாப்பு கொடுக்கப்படவேண்டிய ஒரு அகதி அல்லது ஒரு நபரது குடும்ப அங்கத்தவரா நீங்கள் என்பதை AAT கருத்தில் கொள்ளும்.

பாதுகாப்பு அல்லது நன்னடத்தை அடிப்படைகளில் பாதுகாப்பு விசா மறுக்கப்பட்டு எடுக்கப்படும் முடிவின் மீள்பரிசீலனைக்கு இந்தத் தகவல் ஏடு பொருந்தாது.

### *அகதி என்பதன் அர்த்தம் என்ன?*

நீங்கள் ஒரு ‘அகதி’யாக அடையாளம் காணப்படுவதற்கு, இனம், மதம், தேசியம், குறிப்பிட்ட ஒரு சமூகக் குழுவில் உள்ள அங்கத்துவம் அல்லது அரசியல் கருத்து ஆகியவற்றின் காரணமாக இடையுறாத் துயரளிப்பிற்கு ஆளாக்கப்படுவோம் என்ற வலுவான காரணத்தோடு கூடிய பயம் ஒன்று உங்களுக்கு இருக்கிறது என்று AAT திருப்திப்படவேண்டும்.

16 டிசம்பர் 2014-இற்குப் பிறகு இடப்பட்டுள்ள பாதுகாப்பு விசா விண்ணப்பங்களுக்கு, நீங்கள் அஞ்சும் இடையுறத் துயரளிப்பு நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் பொருந்துவதாக இருக்கிறது என்பதையும், அந்த நாட்டின் அதிகாரிகளால் உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க இயலாது என்பதையும் நீங்கள் காண்பித்தாக வேண்டும்.

இந்தத் தகவல் ஏடு பொதுவான தகவல்களை மட்டுமே அளிக்கிறது. உங்களுடைய வழக்கைப் பற்றிய சட்டப்படியான அறிவுரை அல்ல இது. சட்ட விடயம் ஒன்றைப் பற்றி அல்லது சட்டம் உங்களுடைய வழக்கிற்கு எப்படிப் பொருந்தும் என்பதைப் பற்றிய கேள்வி ஒன்று உங்களுக்கு இருந்தால், நீங்கள் சட்ட உதவியை நாடவேண்டும்.

### *குறை-நிரப்புப் பாதுகாப்பு (complementary protection) என்றால் என்ன?*

நீங்கள் ஒரு 'அகதி' என்று AAT திருப்திப்படவில்லையேல், நீங்கள் உங்களுடைய நாட்டிற்குத் திருப்பி அனுப்பப்பட்டால் கணிசமான தீங்கிற்கு நீங்கள் ஆளாவதற்கான உண்மையான ஆபத்து இருக்கிறது என்று AAT திருப்திப்பட்டால், 'குறை-நிரப்புப் பாதுகாப்'பை அது உங்களுக்கு வழங்கக்கூடும்.

'கணிசமான தீங்கு' என்பது பின் வருவனவற்றைக் குறிக்கும்:

- கண்மூடித்தனமான வகையில் உயிர் பறிக்கப்படல்
- மரண தண்டனை
- சித்திரவதை
- கொடூரமான அல்லது மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படல் அல்லது தண்டிக்கப்படல்
- கீழ்த்தரமாக நடத்தப்படல் அல்லது தண்டிக்கப்படல்.

நீங்கள் அஞ்சும் தீங்கு என்பது தனிப்பட்ட முறையில் உங்கள் சம்பந்தப்பட்டதாக இருக்கவேண்டும், நாட்டு மக்களால் பொதுவாக எதிர்கொள்ளப்படும் தீங்காக அல்ல. நியாமான முறையில் நீங்கள் வேறு இடத்திற்குக் குடிபெயர்ந்து வாழ்வதற்கான இடம் உங்களுடைய நாட்டில் எங்கும் இல்லை என்றும், உங்களுடைய சொந்த நாட்டு அதிகாரிகளால் உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க இயலாது என்றும் நீங்கள் காண்பித்தாக வேண்டும்.

## AAT எவ்வாறு முடிவை மேற்கொள்ளும்?

தன் முன்பாக உள்ள உங்களுடைய விண்ணப்பத்துடன் சம்பந்தப்பட்ட அனைத்துத் தகவல்களையும் AAT நோக்கும். பின் வருவன இதில் உள்ளடங்கும்:

- உங்களுக்கு விசா வழங்க திணைக்களத்தினர் ஏன் மறுத்தார்கள் என்பதற்கான காரணங்களைக் கோடிட்டுக் காண்பிக்கும் திணைக்களத்திடமிருந்து வந்த முடிவைப் பற்றிய கடிதம்
- உங்களுடைய வழக்கிற்கு ஆதரவாக திணைக்களத்திற்கும் AAT -யிற்கும் நீங்கள் கொடுத்துள்ள ஆதாரங்கள் எதுவும்
- உங்களுடைய விண்ணப்பத்திற்கு ஏற்புடையது என்று திணைக்களம் கருதிய மற்ற தகவல்கள்.

## என்னுடைய மீள்பரிசீலனைக்கு ஆதரவாக இருக்கும் வகையில் AAT -யிற்கு நான் என்ன தகவல்களைக் கொடுக்கலாம்?

உங்களுடைய வழக்கிற்கு ஆதாரமான எவ்வொரு தகவலையும் நீங்கள் கொடுக்கலாம். கிழே பட்டியலிடப்பட்டுள்ள தகவல்களுக்கு அப்பாற்பட்ட தகவல்களையும் நீங்கள் கொடுக்கலாம், நீங்கள் கொடுக்கும் தகவல்கள் உங்களுடைய தனிப்பட்ட சூழல்களைப் பொறுத்ததாக இருக்கும்.

எமக்குக் கொடுப்பதற்கான உபயோககரமான தகவல்களுக்கான உதாரணங்களில் பின் வருவன உள்ளடங்கும்:

- பாதுகாப்பு விசா ஒன்றிற்காக நீங்கள் விண்ணப்பிப்பதற்கான காரணங்கள் உள்ளடங்க, உங்களுடைய சூழல்களைப் பற்றிய உங்களால் கையொப்பமிடப்பட்ட ஒரு வாக்குமூலம்

- உங்களுடைய சொந்த நாட்டிலுள்ள நிலைமைகளைப் பற்றிய நாட்டுத் தகவல்கள்

- உங்களுடைய கோரிக்கைகளுக்கு ஆதாரமாக இருக்கும் தகவல்கள் எதுவும்.

## என்னைப் பற்றிய தகவல்களை AAT -யிற்கு நான் எப்போது கொடுக்கவேண்டும்?

தகவல்களைக் கூடிய விரைவில் நீங்கள் எமக்குக் கொடுக்கவேண்டும். நீங்கள் எமக்குக் கொடுக்கும் தகவல்களில் நாங்கள் திருப்திப்பட்டால், வழக்கு-விசாரணை ஒன்றிற்கான தேவை இல்லாமல் சாதகமான முடிவு ஒன்று இயலுமாகலாம். உங்களுடைய விண்ணப்பத்தின் மீதான முடிவு ஒன்றை நீங்கள் இன்னும் சீக்கிரமாகப் பெறுவீர்கள் என்பது இதன் பொருள்.

### *வழக்கு-விசாரனை ஒன்றில் சாட்சியம் அளித்தல்*

வழக்கு-விசாரணை ஒன்றிற்கு வருமாறு நீங்கள் வேண்டப்பட்டால், AAT அங்கத்தவர் ஒருவர் உங்களுடைய விண்ணப்பத்தினைப் பற்றி உங்களைக் கேட்பார், அத்துடன் நீங்கள் முன்-வைக்கும் அனைத்துத் தகவல்களையும் கருத்தில் கொள்வார். பொதுவாக, உங்களுடைய வழக்கினைப் பற்றி நீங்கள் எமக்குக் கொடுத்திருக்கும் ஆவணங்களை இது உள்ளடக்கும். வழக்கு-விசாரணைக்கு 7 நாட்களுக்கு முன்பாக எவ்வொரு தகவலையும் நீங்கள் எமக்குக் கொடுக்கவேண்டும், அல்லது இதற்கும் முன்பாக எவ்வொரு தகவலையும் எமக்குக் கொடுக்குமாறு நாங்கள் கேட்டால், நாங்கள் சொல்லும் திகதிக்குள் நீங்கள் அத் தகவலைக் கொடுக்கவேண்டும்.

AAT அங்கத்தவருக்கு நீங்கள் கொடுக்கும் எவ்வொரு தகவலும் முக்கியமான ஆதாரமாகும். வழக்கு விசாரணைக்கு முன்பாகவே இந்த ஆதாரங்களை ஆயத்தம் செய்வது உங்களுடைய வழக்கினை நீங்கள் முன்-வைப்பதற்கு உங்களுக்கும், முடிவு ஒன்றை மேற்கொள்ள

அங்கத்தவருக்கும் உதவலாம்.

## உங்களுக்குக் கேள்விகள் ஏதும் இருந்தால் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்

- தொலைபேசி: **1800 228 333**
- மின்னஞ்சல்: mrdivision@aat.gov.au
- www.aat.gov.au
- நேஷனல் ரிலே சர்வீஸ் www.relayservice.gov.au
- மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்பு சேவை (TIS) 131 450

*இந்தத் தகவல் ஏடு "நீங்கள்" என்று சொல்லும் இடங்களில் அது விண்ணப்பதாரியைக் குறிக்கும், மற்றும் அவரால் பெயர்மொழியப்பட்டவர், அவரது பிரதிநிதி அல்லது அவரது ஆதரவுதவியாளரை உள்ளடக்கும். இந்தத் தகவல் ஏடு "நாம்" "எமக்கு" என்று சொல்லும்போது அது AAT-யைக் குறிப்பதாக இருக்கும்.*

இந்தத் தகவல் ஏடு பொதுவான தகவல்களை மட்டுமே அளிக்கிறது. உங்களுடைய வழக்கைப் பற்றிய சட்டப்படியான அறிவுரை அல்ல இது. சட்ட விடயம் ஒன்றைப் பற்றி அல்லது சட்டம் உங்களுடைய வழக்கிற்கு எப்படிப் பொருந்தும் என்பதைப் பற்றிய கேள்வி ஒன்று உங்களுக்கு இருந்தால், நீங்கள் சட்ட உதவியை நாடவேண்டும்.